**தலைப்பு 225 – இலங்கை பொலிஸ்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 225 - இலங்கை பொலிஸின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை பொலிஸின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் இலங்கை பொலிஸ் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 ஜூலை 19 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான இலங்கை பொலிஸின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இலங்கை பொலிஸின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு இலங்கை பொலிஸின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி நிலைமைக் கூற்றின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதி ரூபா 763,726,013 தொகை எனினும், அத்திகதியில் உள்ளவாறு தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் மொத்தக் கூட்டுத்தொகை ரூபா 684,016,443 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 79,709,570 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. அந்த வித்தியாசத்தை இனங்கண்டு தேவையான சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த வித்தியாசம் நீண்ட காலம் முதல் முன்கொண்டு வந்து காணப்படுவதுடன், திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் தனிப்பட்ட மீதிகளிடையே வித்தியாசத்தை முறைப்படி குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | வித்தியாசங்களை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### (ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

இலங்கை பொலிஸினால் நிலையான சொத்துக்கள் பதிவேடு முறைப் பிரகாரம் மற்றும் நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **நிலையான சொத்துக்கள்**<br>2022 திசெம்பர் 13 திகதிய 2022/05 இலக்கம் கொண்ட அரச கணக்கு வழிகாட்டலின் பந்தி 8.1 இற்கு இணங்க ஸிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தினுள் நிலையான சொத்துக்கள் மொடியுல் மூலம் பொலிஸ் பிரிவுகளின் அறிக்கைகளை ஒன்றினைத்து சொத்துப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் சென்றிருக்கவில்லை. | பொலிஸ் பிரிவு மட்டத்தில் ஒன்றினைந்த சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன என அறிவிக்கப்பட்டிருந்தது. | ஸிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தினுள் நிலையான சொத்துக்கள் மொடியுல் மூலம் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரை ஆக்கப்பட்டு பேணி வர வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவுகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மூலதனச் செலவு விடயம் ஒன்றிற்காக மீளாய்வாண்டில் ரூபா 555.95 மில்லியன் தொகை ஒன்று ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், ஆண்டின் போது நிதிப் பிரமாணங்கள் 66 இன் மூலம் ரூபா 325 மில்லியன் தெகை மாற்றப்பட்டிருந்த போதிலும், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 880.95 மில்லியன் தொகைக்கான ஒட்டுமொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தது. | வெளி நாட்டுக் கடன் கொடுப்பனவு செலவு விடயம் 225-1-1-23-2101(12) கீழ் ஜீப் வண்டிகளின் பெறுமதி கணக்கீடு செய்வதற்காக நி.பி. 66 இன் கீழ் ஏற்பாடுகள் மாற்றப்பட்ட போதிலும், ஜீப் வண்டி பெற்றுக்கொள்ளும் அலுவல்கள் திசெம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டதனால் 2022/12/31 திகதிக்கு முன்னர் கணக்குப் பதிவு அலுவல்கள் மேற்கொள்ளப்பட முடியாமல் போனது என அறிவிக்கப்பட்டிருந்தது. | முறையான ஆய்வொன்றினூடாக ஏற்பாடுகள் ஒதுக்குவதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும். |
| (ஆ) | ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் கூற்றின் குறிப்பு (iv) படி செலவு விடய இலக்கம் 225-1-1-0-1204 இன் படி மருத்துவ வழங்கல் பிரிவின் (மருந்துகள் கொள்வனவிற்காக) | ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் கூற்றின் குறிப்பு (iv) படி ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 15,678,982 | பொறுப்புகளை சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | |
|---|---|
| ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 15,678,982 தொகை எனினும், அதனை மிகைத்து ரூபா 323,489,273 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தொகை எனினும், அரச ஒசுசலவிற்கு காணப்படும் பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 323,489,273 தொகையாக காணப்பட்டமையால் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்களின் மொத்தப் பெறுமதி ரூபா 339,168,255 தொகை என அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

| **சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (i) **நியதிச் சட்ட ஏற்பாடுகள்**<br>2011 இன் 44 இலக்க தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவகச் சட்டத்தின் பகுதி V | பணம் தொடர்பான அலுவல்கள் தொடர்பாக "தேசிய பொலிஸ் கல்வி நிறுவக நிதியம்" நிறுவுதல் மற்றும் சட்டத்தில் அதற்குரிய 22 முதல் 28 வரையான கருமங்கள் மற்றும் செய்பணிகள் நடைபெற்றிருக்கவில்லை. | 2023 ஆண்டிற்காகவும் ஏற்பாடுகள் தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவகத்தின் வருமானம் மற்றும் செலவு அறிக்கையிடல் 225 - இலங்கை பொலிஸ் செலவுத் தலைப்பின் கீழ் காணப்படுவதால் தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவகச் சட்டத்தின் அதற்குரிய 22 முதல் 28 வரையான கருமங்கள் மற்றும் செய்பணிகள் மேற்கொள்வதற்கு இயலாமல் இருந்தது என அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதியத்தை நிறுவுவதற்கு உரிய தீர்மானங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| **(ii) பொது நிருவாக சுற்றறிக்கைகள்**<br>2009 மே 01 திகதிய 11/2009 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையினால் | கம்பஹா பொலிஸ் பிரிவைச் சேர்ந்த அரசாங்க வீடுகள் உத்தியோகத்தர்களுக் | இலங்கை பொலிஸ் உத்தியோகத்தருக்காக உத்தியோகபூர்வ வாசஸ்தளங்கள் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| திருத்தப்பட்ட XIX ஆம் அத்தியாயத்தின் பிரிவு 6.1 | கு வழங்கும் போது சுற்றறிக்கை ஏற்பாடுகள் கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்குவது தொடர்பாக பொலிஸ் மா அதிபர் சுற்றிக்கை ஒன்று வெளியிடுவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன், எதிர் காலத்தில் பொலிஸ் மா அதிபர் சுற்றறிக்கை ஒன்றின் மூலம் இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தாபனக் கோவை மற்றும் பொது நிருவாக சுற்றறிக்கையின் படி செயற்படுத்துவதற்கு அறிவுருத்தல் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |
| **(iii) ஆரச நிதிச் சுற்றறிக்கை** | | | |
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் புதிய நிதிப் பிரமாணம் 876 | சுற்றறிக்கைக்கு இணங்க பொலிஸ் விளையாட்டு நிதியம் சட்டரீதியாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொலிஸ் விளையாட்டுக் கழகம்/ நிதியம் உத்தியோத்தர்களின் நலன்புரி விடயங்களுக்காக பேணிச் செல்லும் விளையாட்டுக் கழகம் ஒன்றாக காணப்படுவதால் பொலிஸ் விளையாட்டு நிதியத்தின் பெயர் பொலிஸ் விளையாட்டுக் கழகம் என மாற்றுவதற்கு பொலிஸ் விளையாட்டுக் கழகத்தின் நிதியத்தை முகாமைத்துவம் செய்தல் தொடர்பாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் (வடமேல் மாகாணம்) தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டதென | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | வும், அதன்படி, 2020.08.28 திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் படி செயற்பட வேண்டிய தேவைப்பாடொன்று காணப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 2.3 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 ஆண்டின் போது சார்க் தீவிரவாத மற்றும் போதைப் பொருள் குற்றங்களை அவதானிப்பு நிலையமொன்று நிர்மாணிப்பதற்காக இந்தியாவினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 45,837,000 இற்கான நன்கொடைத் தொகையில் மீதியாக காணப்படும் ரூபா 11,503,192 இற்கான தொகையொன்று குறிப்பிட்ட கருமத்திற்காக பயன்படுத்தப்படாமல் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான எதிர்கால வேலைத் திட்டமொன்றும் காணப்படவில்லை. | இந்த மீதித் தொகை சார்க தீவிரவாத மற்றும் போதைப் பொருள் குற்றங்களை அவதானிப்பு நிலையத்தின் திருத்த வேலைகளுக்காக பயன்படுத்துவதற்காக இலங்கை பொலிஸினால் தீர்மானிக்கப்பட்டு இலக்கம் SO/IN/OUT/SO4/417/18 கொண்ட 2018 ஜனவரி 29 திகதிய கடிதம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஊடாக கத்மன்டு சார்க் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. 2018 ஆண்டின் பின்னர் சார்க் மாநாடு ஒன்று நடாத்தப்படாமையால் அது தொடர்பாக கலந்துரையாடுவதற்கும் சந்தர்ப்பம் ஒன்றும் கிடைக்கவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட குறிக்கோள்களுக்காக ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 திகதிய 2/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 10.2 இற்கு இணங்க அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல் இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கு இணங்க வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுற்றறிக்கைக்கு இணங்க நிதிக் கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் 12.1 பந்தியின் படி வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்கு முன்னர் சபையில் சமர்ப்பிப்பதற்கு உரிய ஏற்பாடுகளின் கீழ் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளமையால் அதன்படி, 2023.02.28 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை பொலிஸின் 2022 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் செயலாற்றல் அறிக்கை அடங்கியிருக்கவில்லை என அறிவிக்கின்றேன். | குறிப்பிட்ட வழிகாட்டலுக்கு இணங்க வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 3.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2011 ஆண்டின் போது பொலிஸ் சாஜன்ட் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபல் உத்தியோகத்தர்களுக்காக 75,000 தொப்பிகள் ரூபா 93,455,119 இற்காக வழங்குவதற்கான பெறுகை செய்முறையின் போது தனது வழங்கலை இரத்துச் செய்ததற்கு எதிராக வழங்குனர் நடுவர் மன்றிற்கு சென்றிருந்தார். நடுவர் மன்றில் 2017 ஜனவரி 21 திகதி வழங்கியிருந்த தீர்ப்பின் படி 75,000 தொப்பிகளுக்கான பணம் மற்றும் அதற்கான ஏனைய கட்டணங்களை செலுத்துவதை இலங்கை பொலிஸினால் மறுதளித்து தொடர்ச்சியாக நீதிமன்றச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்ததுடன், வழங்குனரின் களஞ்சியக் கட்டணம் | வாணிப உச்ச நீதிமன்ற தீர்ப்பிற்கு இணங்க இலங்கை பொலிஸினால் 60,000 தொப்பிகளுக்காக வழங்கள் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய 414,000 அமெரிக்க டொலர்களின் 10 சதவீதமாகிய 41,400 அமெரிக்க டொலர்கள் 2022 மார்ச் 16 திகதி வெளிநாட்டு முகவர் நிலையத்திற்கு செலுத்தியிருந்ததுடன், மீதித் தொகையை செலுத்துவதற்காக நாணயப் பத்திரம் திறக்கப்பட்டுள்ளது எனவும், 2023 ஜூன் 06 திகதி இலங்கைக்கு பண்டங்கள் கிடைக்கவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | இந்தப் பெறுகைகள் மற்றும் நடுவர் மன்ற செய்முறையின் குறைபாடுகள் காரணமாக அரசுக்கு மேற்கொள்ள நேரிட்டிருந்த மேலதிக செலவுகள் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களை இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

சட்டச் செலவுகள் மற்றும் செலாவணி விகிதாசார அதிகரித்தலின் நட்டத்தை இலங்கை பொலிஸினால் ஏற்றுக்கொள்ள வேண்டும் என வழங்குனர் வேண்டியிருந்தார். 2023 ஜனவரி 25 திகதி அளவில் ரூபா 219,357,715 தொகை செலுத்துவதற்கு நேரிடும் என இலங்கை பொலிஸினால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் பெறுகை செய்முறையின் முறைசாரா தன்மை மற்றும் நீண்ட காலம் கடந்திருந்த போதிலும் இணக்கம் ஒன்றிற்கு வராமல் ஏற்பட்டிருந்த தாமதங்கள் காரணத்தினால் மேற்கொள்ள நேரிட்டிருந்த கிரயத்திற்காக பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஹபராதுவ ‘‘நில செவன’’ திட்டத்தில் வீடொன்று ரூபா 3.8 மில்லியன் வீதம் 192 வீடுகள் ரூபா 729.6 மில்லியனிற்காக கொள்வனவு செய்வதற்காக 2017 திசெம்பர் 29 திகதி உடன்படிக்கை ஒன்றுக்கு அணுகியிருந்தது. 2019 ஏப்ரல் 02 திகதி அளவில் ரூபா 500 மில்லியனிற்கான முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன், இந்த உத்தியோகபூர்வ வாசஸ்தளத் தேவைப்பாடு மற்றும் கேள்விகள் தொடர்பாக சரியான ஆய்வொன்று மேற்கொள்ளாமல் கொள்வனவு செய்வதற்காக உடன்படிக்கை மேற்கொண்டிருந்தமையால் குறிப்பிட்ட பொது வசதிகளும் உட்பட 192 வீடுகள் முறைப் பிரகாரம் உரித்தாக்கும் அலுவல்களும் 2023 மார்ச் மாதம் வரை முடிவடைந்திருக்கவில்லை.

இதற்கான சட்ட ஆலோசனை பெற்றுக்கொள்வதற்காக சட்டமா அதிபருக்கு அறிவிக்கப்பட்டமையாலும் சட்டமா அதிபரின் அறிவுரைகளை பெற்ற பின்னர் பெறுமதி மதிப்பீடு தொடர்பாக முறையான இணக்கப்பாடொன்றிற்கு வந்த பின்னர் 128 வீடுகள் கொள்வனவு செய்தவதற்காக புதிய உடன்படிக்கையொன்று மேற்கொண்டு வீடுகள் கொள்வனவு செய்தவற்காக மேற்கூறிய அவதானிப்புக்களின் கீழ் சட்ட ரீதியான பாதிப்பொன்றும் காணப்படவில்லை என பணிப்பாளர் சட்டப் பிரிவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட 192 வீட்டு அலகுகளுக்கு பதிலாக வழங்கப்பட்டுள்ள முற்பணத் தொகை அடங்கும் விதமாக 128 வீடுகள் மாத்திரம் கொள்வனவு செய்வதற்கு

வீடுகளை உரித்தாக்கும் போது உடன்படிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும்.

தீர்மானிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஜுன் 20 திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்த பொலிஸ் கல்வி நிறுவகம்ஒன்று நிறுவுவதற்காக திட்டமிப்பட்ட 12 ஏக்கர் 01 ரூட் 08 பர்சஸ் அளவினை கொண்ட மல்வானையில் அமைந்துள்ள காணியும் பொலிஸ் குதிரைப் படைப் பிரிவுக்கு மற்றும் பொலிஸ் படைவீர் பாதுகாப்பு நிலையம் நிர்மாணிப்பதற்காக திட்டமிட்டிருந்த 75 ஏக்கர் ஹொரண எல்லகந்த வத்த எனும் காணியும் இங்கிரிய உயர்பயிற்சி பொலிஸ் பயிற்சி கல்லூரி மற்றும் இங்கிரிய பொலிஸ் நிலையம் நிர்மாணிப்பதற்காக 2008 ஆண்டில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 8.8 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்த சுமார் 6 ஏக்கர் நிலம் ஆகிய காணிகள் சிக்கலின்றி உரித்தாக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் மேற்கூறிய காணி அரசமயப்படுத்தப்பட்டு இருக்காமல் உரிமையாளர் ஒருவர் முன்வராத காணியாக காணப்பட்டமையால் காணியை உரித்தாக்கும் சட்டத்திற்கு இணங்க அரசுக்கு உரித்தாக்க வேண்டியிருந்ததுடன், அதற்காக காணியை விண்ணப்பிக்கும் திணைக்களத்தினால் குறிப்பிட்ட கையேற்றல் பிரேரணைகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது.<br><br>எதிர்ப்புகள் தொடர்பாக விசாரணைகள் நடாத்தப்பட்டு எதிர்ப்புக்கள் ஏதும் முன்வைக்கப்படாமையால் உரித்தாக்கும் தொடர் நடவடிக்கையை விரைவுபடுத்தும் படி பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரினால் 2022.10.29 திகதி சுற்றுலா மற்றும் காணி அமைச்சுச் செயலாளருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டதுள்ளது.<br><br>2023.04.06 திகதி இங்கிரிய பிரதேச செயலகத்தினால் இலங்கை பொலிஸுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இந்தக் காணியின் தேவையான அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்வதற்காக எதிர்ப்பு | காணியை உரித்தாக்கும் அலுவலக்கள் விரைவாக பூர்த்தி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஏதும் இல்லை எனவும் மற்றும் காணியின் ஏனைய அளவை நடவடிக்கைகளுக்காக பிரதேசத்துக்கு உரிய கிராம உத்தியோத்தருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கும் படி அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 2016 திசெம்பர் மாதம் ஒன்று ரூபா 3.3 மில்லியன் தொகை வீதம் ரூபா 333 மில்லியனுக்காக காலி வெகுனகொட ‘‘நில செவன’’ வீடமைப்புத் திட்டத்திலிருந்து கொள்வனவு செய்த 100 வீடுகளுக்காக சாட்டுதல் காணி உறுதிகள் 2023 மார்ச் மாதம் வரை பெற்றிருக்கவில்லை. | இந்த 100 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களுக்காக சாட்டுதல் காணி உறுதிகள் மற்றும் கூட்டு ஆவண வரைபுகள் பெற்றுத் தரும்படி Walkers CML கம்பனிக்கு அறிவிக்கப்பட்டது. இக் கம்பனியினால் முத்திரைக் கட்டணம், சட்டவரைஞர் கட்டணம் மற்றும் கூட்டு ஆதன வரைபுக் கட்டணம் செலுத்தும் படி அறிவிக்கப்பட்டு இருந்ததுடன் குறிப்பிட்ட பணத்தை செலுத்துவதற்கு எதிர்ப்பு ஏதும் இல்லை என சட்டமா அதிபரினால் 2023.03.03 திகதி அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக சாட்டுதல் காணி உறுதிகள் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. | வீடுகளை உரித்தாக்குவதற்கான காணி உறுதிகள் பெற்றுக் கொள்வதை விரைவுபடுத்த வேண்டும். |

### 3.4 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொலிஸ் மருத்துவ சேவை பிரிவை சேர்ந்த நாரஹேன்பிட பொலிஸ் வைத்தியசாலையின் களஞ்சியத்தில் காணப்பட்ட 2018-2022 காலப் பகுதியில் காலவறையாகிய மருந்துகள் மற்றும் அறுவைச் சிகிச்சை உபகரணங்களின் பெறுமதி ரூபா 6,896,457 தொகையாக காணப்பட்டதுடன் சரியான | 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் காணப்பட்ட கொரோனா தொற்று நிலைமைகளின் காரணமாக அனைத்து நிபுணத்துவ பிணிஆய்வு வெளிநோயாளர் பிரிவிற்கு சிகிச்சைக்காக நோயாளர்களின் வருகை குறைவடைதல் காரணமாக இருந்தது. பொலிஸ் தகவல் | சரியான இருப்புக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று மற்றும் நாளதுவரை ஆக்கப்பட்ட களஞ்சிய தகவல் முறைமை ஒன்று செயற்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருப்புக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று மற்றும் நாளதுவரை ஆக்கப்பட்ட களஞ்சியத் தகவல் முறைமையொன்று செயற்படாமையால் இந்த காலவதியாதல் நேரிட்டிருந்தது. | தொழிநுட்ப பிரிவு மற்றும் வைத்தியசாலையின் கணினிப் பிரிவு சேர்ந்து கணினி நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரித்த பின்னர் பொலிஸ் வைத்தியசாலைகளில் மருந்துகள் தொடர்பாக சரியான இருப்புக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று பேணிச் செல்வதற்கு இயலுமாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 42 நட்டங்கள் சேதங்கள் சந்தர்ப்பங்கள் தொடர்பாக ரூபா 33,092,970 தொகை அறிவிக்கப்பட்டு 2023 மே மாதம் வரை 05 வருடங்களை மிகைத்திருந்த போதிலும் இது தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | இவ் விடயம் தொடர்பாக சட்டமா அதிபருக்கு தேவையான கோப்புக்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், சட்டமா அதிபரிடம் அங்கீகாரம் கிடைத்த பின்னர் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட பிரிவுகளுடன் கலந்துரையாடி தாமதங்களை தவிர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இரண்டு வாகனங்கள் தொடர்பாக 2016 ஆண்டில் ஏற்பட்டிருந்த விபத்து ஒன்றின் நட்டமாகிய ரூபா 9,780,583 இற்கான பெறுமதியில் ரூபா 4,818,554 தொகை காப்புறுதி நட்டஈடாக அறவிடப்பட்டிருந்ததுடன் மீதியாகிய நட்டத்தின் பெறுமதி ரூபா 4,962,029 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் இணைப்பு (i) நட்டங்கள் மற்றும் கைவிடுதல் கூற்றில் அறவிடப்பட வேண்டிய நட்டத்தின் பெறுமதி என ரூபா 7,190,583 தொகை எனக் காட்டப்பட்டிருந்தது. | 2016 ஆண்டில் கருவாத்தோட்ட பகுதியில் ஏற்பட்டிருந்த ரூபா 4,962,029 தொகைக்கான விபத்து நட்டம் ரூபா 7,190,583 தொகை என தவறுதலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன், அவற்றை சரிசெய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் நட்டங்கள் மற்றும் சேதங்களின் கீழ் சரியான பெறுமதி உட்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 2005, 2006 ஆகிய ஆண்டுகளின் போது அம்பாறை பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பண்டக் கணிப்பீட்டின் போது கண்டறியப்பட்ட ரூபா 6,297,306 இற்கான பண்டப் பற்றாக்குறை நிதிக்கூற்றுக்களில் அட்டவணை (i) இல் நட்டங்கள் மற்றும் கைவிடுதல் தொடர்பான கூற்றில் ரூபா 2,725,203 தொகை காட்டப்பட்டிருந்தது. | 2005, 2006 ஆகிய ஆண்டுகளின் போது அம்பாறை பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பண்டக் கணிப்பீட்டில் கண்டறியப்பட்ட ரூபா 6,297,306 இற்கான பண்டப் பற்றாக்குறை தொடர்பாக ரூபா 4,831,359 இற்கான தொகை ஒன்று 2023 மார்ச் 20 திகதி ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன், அதனை தவறுதலாக 2022 | நிதிக்கூற்றுக்களில் நட்டங்கள் மற்றும் சேதங்களின் கீழ் சரியான பெறுமதி உட்படுத்தப்பட வேண்டும். |

நிதிக் கூற்றுக்களில் ரூபா 2,725,203 தொகை என காட்டப்பட்டிருந்தது. இந்த வழு 2023 நிதிக் கூற்றுக்களின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புதிதாக ஆரம்பிக்க திட்டமிட்டுள்ள மாபோதல மற்றும் ரங்வல பொலிஸ் நிலையங்களுக்காக இரண்டு கட்டிடங்கள் வாடகைக்கு பெறுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் வாடகை ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்படாமல் மற்றும் அதற்காக ஆதன முகாமைத்துவ பிரிவின் முறையான அங்கீகாரமின்றி இரண்டு கட்டிடங்கள் பெறப்பட்டு இருந்ததுடன், அந்த இரண்டினதும் கழிவறைகளுக்குரிய நிர்மாண வேலைகள் மற்றும் வர்ணம் தீட்டல் மற்றும் கராஜ் ஒன்று நிர்மாணித்தல் போன்ற அலுவல்களுக்காக ரூபா 900,144 தொகை கம்பஹா பொலிஸ் பிரிவின் மூலம் செலவிடப்பட்டிருந்தது. பொலிஸ் நிலையங்கள் புதிதாக ஆரம்பிக்கும் செயற்திட்டம் நிறுத்தப்பட்டிருந்தமையால் இச் செலவு சிக்கமற்ற செலவொன்றாக மாறியது. | தேசிய பாதீட்டு சுற்றறிக்கைக்கு 03/2022 இற்கு அமைவாக மாபோதல மற்றும் ரங்வல பொலிஸ் நிலையங்கள் ஆரம்பிக்க முடியாமல் போனதுடன் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டிடங்கள் தொடர்பாக உடன்படிக்கைகள் மேற்கொள்வதற்கு மாபோதர பொலிஸ் நிலையம் 2022.01.31 திகதியும் ரங்வல பொலிஸ் நிலையத்திற்காக 2021.07.28 திகதியும் பணிப்பாளர் ஆதன முகாமைத்துவத்திற்கு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது. | வாடகை உடன்படிக்கைளுக்கு அணுகுவதற்கு முன்னர் கட்டிடங்களுக்கான செலவுகள் மேற்கொள்ளப்படக் கூடாது. |
| (ஆ) | பயங்கரவாத அடக்கு மற்றும் விசாரணை பிரிவு மற்றும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 04 பொலிஸ் பிரிவுகளை நடாத்திச் செல்வதற்காக 2020 ஜனவரி 01 திகதி முதல் 2021 திசெம்பர் 31 திகதி வரை மாதாந்தம் ரூபா 9,775,000 வீதம் ரூபா 234,600,000 (VAT இன்றி) கொழும்பு 05 கிருலப்பன எவனியு புடானி கெபிடல் கட்டிடத்தை வாடகைக்கு பெற்றிருந்ததுடன் 2022 ஜனவரி 01 திகதி முதல் 2023 திசெம்பர் 31 வரையான 02 வருடங்களுக்கான இக் கட்டிடம் ஒரு மாதத்திற்கு ரூபா | பொலிஸ் தலைமையகத்தின் புதிய செயலக கட்டிடத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் திருத்தவேலைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதனால் 2023 திசெம்பர் 31 திகதி வரை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் நவீன தொழிநுட்ப முறையை பயன்படுத்தி வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக மின்சார கிரயம் ஒன்று மேற்கொள்ள | கட்டிங்களை வாடகைக்கு பெறும் போது தேவைப்பாடுகள் மற்றும் பராமரிப்பு செலவுகள் தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| 10,400,000 வீதம் கூட்டுத்தொகை ரூபா 249,600,000 தொகைக்கு மீண்டும் வாடகைக்கு பெறப்பட்டிருந்தது. இக் கட்டிடத்திற்காக வெளி வாகனத் தரிப்பு நிலையம் ஒன்று காணப்படாததுடன், 06 மாடிகளைக் கொண்ட கணிசமான அளவு இடவசதி ஒன்றில் வாகனத் தரிப்பிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அங்கு மோட்டார் வாகனங்கள் அல்லாத மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள் போன்ற வாகனங்கள் நிறுத்திவைக்க முடியாதிருந்ததுடன், அங்கு மோட்டார் வாகனங்களை மேலும் கீழும் எடுத்துச் செல்வதற்காக மிகையான மின்சாரச் செலவு ஒன்றினை மேற்கொள்ள நேரிட்டிருந்தது. 2023 மார்ச் மாதமளவில் ரூபா 3,000,000 தொகையினை மிகைத்த மாதாந்த மின்சாரக் கிரயம் ஒன்று செலவிட நேரிட்டிருந்தது. | நேரிடுவதுடன் இக் கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு உரிய மின்சார செலவை இலங்கை பொலிஸினால் செலுத்த வேண்டுமென 2022 திசெம்பர் 30 திகதி அமைச்சுச் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டிருந்தது. | |

### 3.6 முகாமைத்துவப் பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மத்திய ஆயுதக் களஞ்சியம், கிளர்ச்சி அடக்கும் அலகு, பொலிஸ் பாடசாலை, பிரிவு மற்றும் பொலிஸ் நிலையங்களில் காணப்படும் ஆயுதக் களஞ்சியங்களுக்கு பெறுகைகள் மற்றும் வழங்கல்கள், திருப்பிப் பெற்றுக் கொள்ளல் மற்றும் இருப்பு மட்டம் ஆகியவற்றை திடீரென இனங்காணக் கூடியவாறு தகவல் முறைமை ஒன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பொலிஸ் மா அதிபரின் கட்டளையின் படி இந்த முறைமை இணையம் மற்றும் VPN தொழிநுட்பத்தின் மூலம் முன்னேற்றப்பட்ட முறைமை ஒன்று இந்நாட்களில் தயாரிக்கப்பட்டு வருவதுடன் விரைவில் அந்த வேலைகள் பூர்த்தி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது. | மத்திய ஆயுதக் களஞ்சியத்திற்காக கணினி தகவல் முறைமை ஒன்று விரைவாக அறிமுகப்படுத்த வேண்டும். |
| (ஆ) | மத்திய ஆயுத களஞ்சியத்தில் பயன்படுத்தப்படும் அந்த பயன்படுத்த முடியாத ஆயுதங்கள், தோட்டாக்கள், கிளர்ச்சி அடக்கும் உபகரணங்கள் மற்றும் போர் உபகரணங்கள் பாரிய எண்ணிக்கையானவைகள் அழிக்கும் | பதில் அறிக்கப்படவில்லை. | அப்புறப்படுத்துவதற்கு உரிய பண்டங்கள் முறைசார் மற்றும் கணிக்கக் கூடியவாறு களஞ்சியப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரை 09 கொள்களன்களில் முறைசாரா மற்றும் கணக்கிட முடியாதவாறு குவிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | மத்திய ஆயுத களஞ்சியத்தில் பொருட் பதிவேட்டின் படி பயன்படுத்த முடியாத C S Tear Gas (shells) 4,844 ரவைகள் மற்றும் C S Tear Gas (Grenades) 4,992 தொகை காணப்பட வேண்டியிருந்த போதிலும் களஞ்சியத்தில் காணப்பட்ட 1,056 (893 மற்றும் 163) இற்கான எண்ணிக்கைகள் தவிர மீதித் தொகை தொடர்பாக ஆவணத் தகவல்கள் முழுமை அற்றவையாகக் காணப்பட்டது. வாழைத்தோட்டம் மற்றும் நாரஹேன்பிட இரண்டு பொலிஸ் நிலையங்களில் காணப்பட்ட 871 Tear Gas எண்ணிக்கை 2004,2005 மற்றும் 2012 ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்டவையாகக் காணப்பட்டது. அதன்படி Tear Gas இருப்பு பொலிஸ் நிலையத்தில் காணப்பட்டதுடன் அவற்றை வழங்கும் சந்தர்ப்பங்களும் காணப்பட்டது. | உத்தியோகத்தர்கள் பரிசோதனை மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் கொள்களன் பெட்டிகளில் இடுவதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டு களஞ்சியத்தின் கொரிடோவில் காணப்பட்ட கண்ணீர் புகை தோட்டாக்கள் 890 எண்ணிக்கை பௌதீக ரீதியாக பரிசோதனை செய்யப்பட்டதுடன், மீதி 3951 தோட்டாக்களும் கொள்களப் பெட்டிகளில் இடப்பட்டிருந்ததுடன், பயன்படுத்த முடியாத 20199 கண்ணீர் புகை தோட்டாக்கள், 13084 கண்ணீர் புகை குண்டுகளுமாக மொத்தம் 33283 எண்ணிக்கை பொலிஸ் மா அதிபரின் கட்டளையின் படி 2023 ஜூலை 01 திகதி அரந்தலாவ அதிரடிப்படை முகாமில் இந்த பயன்படுத்த முடியாத தோட்டாக்கள், கிளர்ச்சி அடக்கு உபகரணங்கள், யுத்த உபகரணங்கள் மற்றும் கண்ணீர் புகை தோட்டாக்கள், குண்டுகளை பயன்படுத்துவதற்கு என அறிவிக்கப்பட்டிருந்தது. | காலவதியாகிய Tear Gas அகற்றுவதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், ஆவணப்படுத்தப்பட்ட தகவல்கள் சரியாக மற்றும் நாளதுவரை ஆக்கப்பட்டு பேணிச்செல்ல வேண்டும். |
| (ஈ) | மோட்டார் வாகனங்களின் வேக வரையறையை பரிசோதனை செய்யும் உபகரணங்கள் 2016 ஆண்டிலேயே இறுதியாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அத்துடன் கொள்வனவு செய்யப்பட்ட எண்ணிக்கை 25 மாத்திரமே. அதற்று முன்னர் 2014 ஆண்டில் 30 உம் 2010 இல் 100 உம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த உபகரணங்களில் பாரிய எண்ணிக்கையானவை தற்போது செயலிழந்த நிலையில் காணப்பட்டது. 2018-2022 காலப் | வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையினால் வேகமானிகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 150 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | மோட்டார் வாகன வேக வரையறையை பரிசோதனை செய்வதற்காக புதிய உபகரணங்கள் விரைவாக மோட்டார் வாகன கடமைகளுக்காக வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பகுதியில் வருடாந்தம் வேகமானி (Automatic Speed Trap) 500 வீதம் மோட்டார் வாகன கட்டுப்பாட்டு மற்றும் வீதி பாதுகாப்பு தொடர்பான பிரிவினால் விண்ணப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவை கிடைத்திருக்கவில்லை. | | |
| (உ) | இலங்கை பொலிஸினால் நீதிமன்றங்களுக்கு அனுப்பப்படுகின்ற மற்றும் குற்றங்கள் மற்றும் தவறுகள் தொடர்பாக தொடர்ந்தும் நடாத்திச் செல்லப்படும் நீதிமன்ற அலுவல்கள் தொடர்பான தகவல்கள் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகள் தொடர்பான விபரங்கள் அடைத்து வைத்தல் அல்லது தள்ளுபடி செய்தல் வழக்குகள் அடங்கிய விபரங்களை கொண்ட நாளதுவரை ஆக்கப்பட்ட தகவல் முறைமை ஒன்றின் தேவைப்பாடு அவசியமாக இருப்பதுடன், இலங்கை பொலிஸின் செயலாற்றல் தொடர்பான மீளாய்வின் போது அவ்வாறான முறைமை ஒன்றின் தேவைப்பாட்டின் முக்கியத்துவமாக காணப்பட்ட போதிலும் அவ்வாறான முறைமை ஒன்று காணப்பட்டதை உறுதிப்படுத்த முடியவில்லை. | இலங்கை பொலிஸினால் பயன்படுத்தப்படும் தகவல் முறைமைகளில் குற்றவியல் விசாரணைகள் மற்றும் நிருவாகம் தொடர்பாக முக்கியமாக 20 கணினி நிகழ்ச்சித் திட்டங்கள் காணப்படுவதுட, அவற்றில் 14 குற்றவியல் விசாரணைகளுக்காக பங்களிப்பு செய்யப்படுகின்றது என இனங்காணப்பட்டுள்ளது. குற்றவியல் விசாரணை செய்முறையை வினைத்திறன் ஆக்கப்படல் மற்றும் நீதிமன்ற அலுவல்கள் முறைப்படுத்துவற்காக மேற்கூறிய முறைமை ஒன்றின் மூலம் பாரிய உதவி ஒன்றினை வழங்குகின்றது என இதுவரை இந்த முறைமைகளில் காணப்படும் தகவல்களை பகுப்பாய்வு செய்த போது கண்டறியப்பட்டது என அறிவிக்கப்பட்டது. | நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்குகள் தொடர்பாக பொலிஸின் செயலாற்றுகையை அளவை செய்யக் கூடிய விதமாக தரவுகள் உட்படுத்திய தகவல் முறைமையொன்று பேண வேண்டும். |
| (ஊ) | அம்பாறை பொலிஸ் நிலையத்தின் பிராந்திய களஞ்சியத்தில் சிதைவடைந்த பண்டங்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த தற்காலிக கொட்டகை தீயினால் அழிவடைந்து 2013 ஆண்டில் ரூபா 2,760,885 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. இந்த நட்டத்தை நிதிப் பிரமாணம் 109 இன் கீழ் பதிவழிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், நிதிக் கூற்றுக்களில் தொடர்ந்தும் காணப்பட்டது. | ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையை, சரி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | ஏடுகளில் இருந்து பதிவழிக்கும் கட்டளை முறைப் பிரகாரம் பதிவு செய்து நட்டங்கள் மற்றும் சேதங்களின் பெறுமதியை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | 1865 இன் 16 இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டத்தை திருத்த வேண்டிய தேவை 2014 ஆண்டு இனங் காணப்பட்டிருந்தது. திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய 16 துறைகள் இனங்காணப்பட்டிருந்தது. தற்போதைய மற்றும் எதிர் கால சமூக மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி தேவைப்பாடுகளுக்கு பொருந்தக்கூடியவாறு நாளதுவரை ஆக்கப்பட்டு திருத்துவதற்காக 2014 நவம்பர் 19 திகதி அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்திருந்த போதிலும் 2023 மே மாதம் அளவிலும் சட்டம் திருத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போது பொலிஸ் கட்டளைச் சட்டத்தை திருத்துவதற்காக பரிந்துரைக்கள் பெற்றுக்கொள்வதற்காக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்களின் தலைமைத்துவத்தில் 03 குழுக்கள் நிறுவுப்பட்டிருந்தது. 03 குழுக்களின் பரிந்துரைகளை பெற்றுக்கொண்ட பின்னர் சட்ட மா அதிபருக்கு சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டம் திருத்தப்பட வேண்டும். |
| (ஏ) | தண்டப் பணம் அறவீடு செய்வதை விரைவுபடுத்தல், அரச வருமானத்திற்கு சேகரிக்கப்படும் தண்டப்பண எண்ணிக்கையை அதிகரித்தல், பொது மக்களுக்கு தண்டப்பணம் செலுத்துவதை இலகுவாக்கல் ஆகிய குறிக்கோளுடன் மோட்டார் வாகன குற்றங்களுக்காக தண்டப் பணம் செலுத்தும் செய்முறை ஒன்று (Spot Fine Information System) நிறுவுவதற்காக 2014 ஆண்டு முதல் திட்டமிடப்பட்டு வந்திருந்த போதிலும் இது வரை குறிப்பிட்ட முறைமை நிறுவப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்த பின்னர் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் முழுமையான மேற்பார்வையின் கீழ் இந்த செயற்திட்டத்தின் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைகள் மேற்கொண்டு செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | இனங்கண்ட குறிக்கோள்கள் நிறைவேற்றப்படக்கூடிய விதமாக சுயமாக தண்டப்பணம் செலுத்தும் செயன்முறை ஒன்று நிறுவுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | 2019 இன் 10 இலக்க மோட்டார் வாகன (திருத்திய) சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தியிருந்த மோட்டார் வாகன குற்றங்கள் விளைவிக்கும் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கையின் படி தண்டப் பணம் அறவீடு செய்யும் முறை 2019 ஜூன் 20 திகதி முதல் செயற்பட்ட போதிலும், மோட்டார் வாகன குற்றங்கள் தொடர்பாக குற்றவாளிகள் ஒரே குற்றத்தை மேற்கொள்ளும் தவணைகளின் எண்ணிக்கை தெளிவாக இனங்காணக் கூடியவாறு தகவல் முறைமை ஒன்று இலங்கைப் பொலிஸ் செயற்படுத்தாமையால் ஒரே குற்றம் பல சந்தர்ப்பங்களில் | அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்த பின்னர் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் முழுமையான மேற்பார்வையின் கீழ் இந்த செயற்திட்டத்தின் மேற்கொண்ட வேலை அலுவல்கள் மேற்கொண்டு செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | தகவல் முறைமையை நிறுவுவதற்காக மற்றும் குறிப்பிட்ட தண்டப் பணம் அறவீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளும் குற்றவாளிகளிடம் சரியான தண்டப் பணம் அறவீடு செய்ய முடியாமல் இருந்தது. | | |
| (ஓ) | அரச உத்தியோகத்தர்களின் முற்பண இணக்கக் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதி அளவில் 2,720 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 63,242,416 தொகையாக காணப்பட்டதுடன், 05 வருடங்களை மிகைத்த நிலுவை கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 44,875,995 தொகையாக காணப்பட்டமையால் அந்த மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022.12.31 திகதியில் உள்ளவாறு 05 வருடங்களை மிகைத்துள்ள அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணம் பீ கணக்கில் நிலுவை மீதியாகிய ரூபா 44,875,996 தொகையில் 2023 மார்ச் 31 திகதி ரூபா 1,278,668 தொகை அறவிடப்பட்டிருப்பதுடன், 2022.03.31 திகதி அளவில் மேலும் அறவிடப்பட வேண்டிய நிலுவையாகவுள்ள கடன் மீதி ரூபா 43,597,328 தொகை என அறிவிக்கப்பட்டிருந்தது. | அறவிடப்பட வேண்டிய நிலுவை கடன் மீதிகளை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நெருங்குதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ‘‘நிகழ்ச்சி நிரல்’’ பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டியிருந்ததுடன், இலங்கை பொலிஸின் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் 04 இன் கீழ் 08 இலக்குகள் இனங் காணப்பட்டிருந்தது. 2016 அடிப்படையாண்டாக எடுக்கப்பட்டு சுட்டிகள் கட்டியமைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை நோக்கி நெருங்கும் போது குறிப்பிட்ட கருமங்களை ஒழுங்குறுத்துவதற்காக தேவையான திருப்பு முனைகளை இனங் கண்டிருக்கவில்லை. | இலங்கை நிலைபேறான அபிவிருத்தி சங்கத்துடன் தொடர்புகொண்டு குறிப்பிட்ட கருமங்களை ஒழுங்குறுத்துவதற்கு தேவையான திருப்பு முனைகள் இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | வருடாந்தம் நெருங்கக் கூடிய இலக்குகளை இனங் கண்டு அவற்றை மதிப்பாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீண்ட காலம் முதல் உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு கிடைக்காமை சிக்கலுக்கு தீர்வொன்றென பொலிஸ் சீருடை பதவியணி பதவிகளுக்காக 2019 ஜனவரி 01 திகதி, 2019 ஜூலை 01 திகதி, 2020 ஜனவரி 01 திகதி மற்றும் 2020 பெப்ரவரி 08 திகதிகளில் ஒவ்வொரு பதவிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை கவனத்தில் எடுக்காமல் வகிப்பவருக்கு தனிப்பட்ட முறையில் என்ற வகையில் பதவியுயர்வு வழங்கப்பட்டமையால் சீருடை பதவியணியில் மொத்த வெற்றிட பதவியணி 16,953 ஆக இருந்தது. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடம் ஏற்படும் சந்தர்ப்பத்திலேயே அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடவடிக்கை முறையின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு வழங்கும் போது முறையான செய்முறை ஒன்று கடைப்பிடிக்கப்படாத காரணத்தினால் பொலிஸ் கன்ஸ்டபில் பதவியில் இருந்து பொலிஸ் பரிசோதகர் பதவி வரையும் மகளிர் மற்றும் ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு ஏற்பட்டிருந்த அநீதியை அகற்றுவதற்காக 2019, 2020 காலப் பகுதியில் 04 சந்தர்ப்பங்களில் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கையை கவனத்தில் எடுக்காமல் பதவியுயர்வு வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, சீருடை பதவியணியில் 2019.01.01 திகதி 6,055 தொகையும், 2019.07.01 திகதி 3,800 தொகையும், 2020.01.01 | நிறைவேற்றுச் சேவை தரத்தின் பதவிகளில் உரிய புதிய ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடவடிக்கை முறை தேசிய பொலிஸ் ஆணைக் குழுவினால் 2019.07.19 திகதி முதல் செயற்படும் விதமாக அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், ஒழுங்குறுத்தல் சேவை தொகுதியின் பதவிகள் தொடர்பாக புதிய ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடவடிக்கை முறைகள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் 2020.10.23 திகதி NPC/ED/NGO/06/SOR/07/2020 (Vol – i, ii, iii) கீழ் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. நீதி மன்றத்தில் பல வழக்குகள் காணப்பட்டமையால் அந்த பதவியுயர்வுகளை செயற்படுத்த முடியாமல் இருந்தவுடன், | உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு வழங்கும் போது அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வு நடவடிக்கை முறையின் படி செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதி 16,983 தொகை மற்றும் 2020.02.08 திகதி 7,413 தொகையுமாக கூட்டுத்தொகை ரூபா 34,251 இற்கு வகிப்பவருக்கு தனிப்பட்ட முறையில் பதவியுயர்வு வழங்கப்பட்டிருந்தது. இதன்படி, இந்த முறையை தொடர்ச்சியாக செயற்படுத்தாமல் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடவடிக்கை முறையின் படி வெற்றிட எண்ணிக்கையின் அடிப்படையில் பதவியுயர்வு வழங்கும் செய்முறை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்றில் விசாரிக்கப்பட்ட வழக்குகள் தற்போது முடிவடைந்துள்ளது. அதன் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடவடிக்கை முறையின் படி பதவியுயர்வுகள் வழங்கப்படல் எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (இ) | உதவிச் சேவையைச் சேர்ந்த 110 பல்வேறு பதவிப் பெயர்கள் அங்கீகரிக்கப்பட்டு காணப்பட்டதுடன், அவற்றின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடவடிக்கை முறைகள் இதுவரை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 34 பதவிப் பெயர்கள் தொடர்பாக மாத்திரமே அங்கீகரிக்கப்படாத 76 பதவிப் பேர்கள் இடையே 76 மருத்துவ உத்தியோகத்தர்கள், 03 மிருக வைத்தியர்கள், 36 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், 09 வரைஞர்கள், 554 கணினி இயக்குனர்கள், 25 கணினி தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் 329 தொழில்நுட்பவியலாளர்களாக மருத்துவ, கட்டிடங்கள், போக்குவரத்து, குதிரைப்படை மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய செயற்படு பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்த அத்தியவசியமான பதவிகள் அவற்றிடையே காணப்படுகின்றன. | பொலிஸ் மருத்துவ சேவைப் பிரிவில் இதுவரை நடவடிக்கை முறை அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன், நடவடிக்கை முறை அங்கீகரிக்கப்படும் வரை இடைநிலை அடிப்படையில் உபசேவை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (மருத்துவ) பதவிக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதற்கு மேலதிகமாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் மருத்துவ பதவிக்கான நடவடிக்கை முறை அங்கீகரிக்கப்படும் வரை உதவிச் சேவை உப பொலிஸ் பரிசோதகர் பதவியில் மருத்துவ மாணவர்கள் 29 பேர் சேர்க்கப்பட்டு தற்போது கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைகழகத்தில் பயிற்சி வழங்கப்படுவதனால் கட்டிடப் பிரிவிற்கு மற்றும் தகவல் தொழில்நுட்ப பிரவுக்கு உரிய உதவிச் சேவை நடவடிக்கை முறை அங்கீகரிக்கப்பட்டிருப்பதுடன், அந்த நடவடிக்கை முறையை மீண்டும் திருத்தத்திற்கு உள்ளாக்க வேண்டியிருந்தமையால் அந்த ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படவில்லை என | உதவிச் சேவை 76 பதவிப் பெயர்களுக்காக ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடவடிக்கை முறை தயாரிக்கப்பட்டு அங்கீகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அறிவிக்கப்பட்டிருந்தது. முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் மூலம் 2022.12.19 திகதி புதிதாக 02 மிருக வைத்தியர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஈ) | பொலிஸ் பிரிவு மற்றும் பொலிஸ் நிலையங்களின் கடமைத் தன்மைகள் தொடர்பாக ஆய்வொன்று மேற்கொண்ட பின்னர் குறிப்பாக இனங்காணப்பட்ட பதவியணியொன்று காணப்படாமையால் அந்த பிரிவு மற்றும் பொலிஸ் நிலையங்களில் வெற்றிடங்கள் காணப்படுகின்றனவா, மிகைகள் காணப்படுகின்றனவா என உறுதியாக அறிவிப்பதற்கு முடியாமல் இருந்தது. இந்த நிலைமையில் பதவியணியினரை நிலைப்படுத்துதல் முறையான செய்முறையொன்று இன்றி செயற்படுத்தப்பட்டிருந்தது. | பொலிஸ் நிலையங்கள், பிரிவுகள் மற்றும் அலுவலக மட்டத்தில் இருக்க வேண்டிய ஒவ்வொரு பதவியில் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை தீர்மானிப்பதற்காக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவரின் தலைமையிலான குழுவொன்று நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன் அந்த குழு அறிக்கையின் படி தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | பொலிஸ் பிரிவுகள் மற்றும் பொலிஸ் நிலையங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியொன்று அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | கம்பஹா பொலிஸ் பிரிவின் சீருடை பதவியணியைச் சேர்ந்த 50 உத்தியோகத்தர்கள் 10 வருடங்கள் முதல் 24 வருடங்கள் வரையான கால வீச்சில் ஒரே நிலையத்தில் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன், சிவில் பதவியணியில் 10 பேர்கள் 10 வருடங்கள் முதல் 17 வருடங்கள் வரையான கால வீச்சில் ஒரே நிலையத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | இடமாற்றக் கொள்கையின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட இடமாற்றக் கொள்கைகளின் படி உத்தியோகத்தர்களின் இடமாற்றம் மேற்கொள்ள வேண்டும். |